28-12-63
சனிக்கிழமை
மாலை 17 : மலர் 22
விலை 16 காசு

திராவிடன்
வாரவெளியீடு ஆசிரியர் என்.வி.நடராசன்

# மகத்தான வெற்றி!

சென்னையை "ஏ" பிரிவு நகரமாக்க வேண்டும் என்ற தி. மு. கழகத்தின் கோரிக்கை மகத்தான வெற்றி பெற்றுவிட்டது!

இத்திங்கள் 21-ம் நாள் நிதியமைச்சர் திரு. டி. டி. கே. அவர்கள் மக்கள் சபையில் தன்னுடைய முடிவைத் தெரிவித்துள்ளார்:

சென்னையை "ஏ" பிரிவு நகரமாக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததை நாட்டு மக்கள் நன்கறிவர்.

கழகக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும், கழக ஏடுகளிலும் இதைப்பற்றி பலமுறை வற்புறுத்தி கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, தி. மு. க, பாராளுமன்றக் குழு இப்பிரச்சினையில் மிகத் தீவிரமாகப் பணியாற்றி வந்தது.

தி.மு.க. பாராளுமன்றக் குழுத் தலைவர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் தனக்கு வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம், சென்னையை 'ஏ' பிரிவு நகரமாக்கும் பிரச்னையை வலியுறுத்தி வந்தார்.

முன்னாள் உள்துறை அமைச்சர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களைக்கூட இது விஷயமாக சந்தித்துப் பேசி, அவரும் ஆவன செய்வதாக உறுதியளித்திருந்தார்.

பொதுவாகவே இந்தப் பிரச்சினையில் தி. மு. கழகத்தைத் தவிர்த்து மற்ற கட்சிகளும் பணியாற்றிவந்தன என்றாலும், உடனடித் தீர்வுகாணும் வகையில் தீவிரமாகப் பணியாற்றிய பெருமை, தி. மு. கழகத்தையும், தி. மு. க. பாராளுமன்றக் குழுவையுமே சாரும்.

திராவிட முன்னேற்றக் கழகம் சென்னையை "ஏ"பிரிவு நகராக்கும் பிரச்னையை தனது பொது மேடைகள், ஏடுகளில் மட்டும் வற்புறுத்தாமல் தனது தேர்தல் அறிக்கையிலேயே (Election Manifesto) அதை ஒரு பிரச்னையாக வைத்துப் பொது மக்களின் ஆதரவைத் திரட்டியது.

1961-ம் ஆண்டு டிசம்பர் 16-ம் நாள் கோவையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டு, 17.ம் நாள் கோவையில் நடைபெற்ற தி. மு. க. தேர்தல் சிறப்பு மாநாட்டில் வெளியிடப்பட்ட தி. மு. கழக தேர்தல் அறிக்கையில், "கழகம் மேற்கொள்ளவிருக்கும் சீரிய பணிகள்" என்ற தலைப்பில், 26ம் பக்கத்தில்,

**"சென்னை மாநகரை 'ஏ' பிரிவு நகரமாக ஏற்றுக் கொள்ளச் செய்யும்"**

என்று இந்தப் பிரச்சினையைத் தேர்தல் திட்டமாக வைத்தே கழகம் பணியாற்றியது!

அதுமட்டுமல்லாமல் இப்பிரச்சினையில் இந்திய சர்க்காரின் அப்போதைய போக்கைக் கண்டித்து, 1962 பொதுத் தேர்தலுக்குப் பிறகு, சென்னை கோடம்பாக்கத்தில் 1962 ஜூலை 13,.14, 15 தேதிகளில் நடைபெற்ற சென்னை மாவட்ட தி. மு. கழக 4-வது மாநாட்டில் இந்தப் பிரச்சினையை வலியுறுத்தி மாநாட்டில் குழுமியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் ஒருமித்த ஆதரவுடன் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது!

**"சென்னை மாநகரின் மக்கட் தொகை பெருக்கத்தையும், நகரின் நெருக்கடியை அதிகரிக்கும் சுற்றுப்புற மக்கள் எண்ணிக்கையையும், அகவிலைப்புள்ளி ஏற்றத்தையும் கருத்தில் கொள்ளாமல் சென்னையை 'ஏ' பிரிவு நகராக ஏற்க மறுத்த இந்தியப் பேரரசின் போக்கையும் — சென்னை நகரிலுள்ள மத்திய அரசின் ஊழியர்களுக்கும் கிடைக்க வேண்டிய உதவித் தொகை கிடைக்காமல் செய்துள்ள வஞ்சனையையும் இம்மாநாடு கண்டிக்கிறது.**

**(அ) சென்னையை 'ஏ' பிரிவு நகராக ஏற்கச் செய்ய தாம் முயற்சி செய்வதாகக் கூறிய தமிழ்நாடு முதலமைச்சர் எவ்வித முயற்சியிலும் ஈடுபடவில்லை யென்பது மத்திய அமைச்சர் அளித்த மறுமொழியிலிருந்து அறிய நேரிட்டு இம்மாநாடு வருந்துவதுடன் இனியாவது மாநில மத்திய அரசினர் தென்னகத்தின் சிறப்பு வாய்ந்த சென்னை நகருக்கு அநீதி இழைக்காமல் 'ஏ' பிரிவு நகராக ஏற்க முன்வர வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.**

—என்ற இத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது

அப்போதிருந்த முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் இது விஷயத்தில் அக்கறையற்றிருந்த தன்மையையும் இத் தீர்மானம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

இன்றைய தினம் ஆயிரக் கணக்கான சர்க்கார் அலுவலர்கள் சென்னை 'ஏ' பிரிவு நகராவதன் மூலம் பயன் பெறுகிறார்கள் என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் கழகம்தான் என்பதை யாராலும் மறுக்க இயலாது!

காங்கிரஸ் அமைச்சர்கள் கவலையற்றிருந்தபோதும், கழகத்தவர்கள் அடிக்கடி இப்பிரச்சினையை வலியுறுத்தி வந்தனர்.

ஆகவேதான் கழகத்தினருக்குத் தங்களது நீண்ட நாளைய கோரிக்கை வெற்றிபெற்றது குறித்து மற்றவர்களைக் காட்டிலும் பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது.

அண்மையில்கூட சில தினங்களுக்கு முன்னர் மக்கள் சபையில் தி. மு. க. பாராளுமன்றக் குழுத் தலைவர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் சென்னையை "ஏ" பிரிவு நகராக்கக்கோரும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

சென்னை நகரின் மக்கள் தொகை ,21 இலட்சத்திற்குமேல் இருக்கிறது என்று சென்னைமக்கட் தொகை கணக்கெடுப்பு மேற்பார்வை அதிகாரி திரு. பி. கே. நம்பியார் குறிப்பிட்டிருப்பதை மனோகரன் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

சென்னை நகரிலும், நகர்ப்புறத்திலும் பல தொழிற்சாலைகள் தோன்றியிருப்பதனால் அதிகரித்துள்ள மக்கள் தொகையையும் சுட்டிக்காட்டி மனோகரன் பேசினார்.

தான் இப்பிரச்சினையில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக நிதியமைச்சர் டி. டி. கே. அவர்கள் அளித்த வாக்குறுதியின் பேரில் நாஞ்சில் மனோகரன் அவர்கள் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

நிதியமைச்சர் டி. டி. கே. அவர்கள் தாம் வாக்குறுதியளித்த வண்ணமே செயல்பட்டிருப்பது பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

மக்களது விருப்பத்தையும்— அதைப் பிரதிபலித்த மக்கள் பிரதிநிதிகளின் கருத்தையும், அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளின் எண்ணத்தையும் உணர்ந்து செயலாற்றிய திரு. டி. கே. கே. அவர்கள் பாராட்டப்படவேண்டியவராகிறார்.

இதற்கு முன்னர் கழக சார்பாக சென்னை மாநகராட்சி மன்ற மேயர்கள் இதுகுறித்துப் பேசியபோது பலவித காரணங்களைக் காட்டி மறுத்துவந்தது அரசாங்கம்.

ஆனால் நாஞ்சில் மனோகரன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட்ட திரு. டி. டி. கே. அவர்களையும், கட்சி வேறுபாடின்றி தீர்மானத்தை ஆதரித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் சீனுவாசன், ஆனந்தன் நம்பியார், டாக்டர் எம். எஸ். ஆனே, நமது கழக பாராளுமன்ற குழுச் செயலாளர் திரு. செழியன் ஆகியோர் அனைவருமே தென்னக மக்களின் நெஞ்சு நிறைந்த நன்றிக்கு உரியவர்களாகிறார்கள்.

கழகத்தின் குரலை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் மக்கள் சபையில் பிரதிபலித்த நாஞ்சில் மனோகரன் அவர்களது சிறந்த பணி கழகத்திற்கு மகத்தான வெற்றியைத் தேடித்தந்துள்ளது.

திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் தென் சென்னைப் பாராளுமன்றத் தொகுதியில்

(2-ம் பக்கம் பார்க்க)

# சென்னை 'ஏ' பிரிவு நகரமாகியது!

## தலையங்கம்

மாலை 17. 28—12—63 மலர். 22

# வெல்க வள்ளுவம்!

—ஃ—

தமிழக சட்டமன்றத்தில் திருவள்ளுவரின் திருவுருவப் படத்தைத் திறந்துவைக்க வேண்டும் என்று சட்டமன்ற தி. மு. க. கட்சித் துணைத் தலைவர் மு. கருணாநிதி அவர்கள் சட்டமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தது நாட்டு மக்களுக்கு நன்கு நினைவிருக்கும்.

தமிழக அரசினரின் இப்போது திருவள்ளுவர் படத்தை அடுத்த ஆண்டு சனவரித் திங்கள் 18-ம் நாள் பண்டித நேரு அவர்களைக் கொண்டு சட்டமன்றத்தில் திறந்து வைக்க ஆவன செய்து வருகின்றனர்.

தமிழக அரசினர் இந்நற்பணியை நாம் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறோம்.

திருவள்ளுவர் தமிழகத்தின் தனிப் பெருமைக்குரியவர் என்பதும், அவர் இயற்றிய திருக்குறள் இன்றைக்கு உலகின் பல பகுதிகளிலும் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது என்பதும் தமிழ் கூறும் நல்லுலகம் மகிழ்ந்து பெருமைப்பட வேண்டிய செய்தியாகும்.

தமிழகத்தில் தோன்றி, அவனியே வியந்து போற்றும்வண்ணம் அருமையான திருக்குறளை வழங்கிய வள்ளுவரை, வையகம் முழுவதும் வாழ்த்தி நிற்கிறது.

திருவள்ளுவர் வழங்கிய அரும்பெரும் திருக்குறளால் செம்மாந்து நிற்கும் தமிழகம், அவரது படத்தைச் சட்டமன்றத்தில் திறந்துவைப்பதன் மூலம் திருவள்ளுவரின் பெருமைக்கு மேலும் சிறப்புச் செய்வதோடல்லாமல், இந்த நற்பணியின்மூலம் தானும் பெருமையடைகிறது.

இச்சீரிய பணியை அவ்வப்போது அரசினருக்கு நினைவூட்டி வந்த கலைஞர் கருணாநிதி அவர்களையும், அவரது கருத்துக்கு மதிப்பளித்து, திருவள்ளுவரின் உருவப்படத்தைத் திறந்துவைக்க முன்வந்த தமிழக அரசினரையும், குறிப்பாக முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களையும் நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

## அண்ணா அவர்களின் சிறிய தாயார் உடல்நிலை

ஃ——ஃ

அண்ணா அவர்களின் சிறிய தாயாரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. அவரது மூளையில் உள்ள இரத்தக் குழாயில் கோளாறு இருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். அதிகம் பேச இயலாத நிலையில் உள்ள அவர்கள் அண்ணாவைக்காண மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள். இவருக்கு வயது 75 ஆகிறது.

## அண்ணா பரோலில் விடுதலை

——[0]——

சுயநினைவற்று இருக்கும் அண்ணா அவர்களின் சிறியதாயாரின் உடல்நிலைபற்றி அண்ணா அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அண்ணா அவர்கள் பரோலில் வர விண்ணப்பித்தார்கள்.

வழக்கறிஞர் நாராயணசாமி, அ. பொ. அரசு, பரிமளம் ஆகியோர் தமிழக முதலமைச்சரைச் சந்தித்து பரோல் விண்ணப்பம் குறித்துப் பேசினர்.

அண்ணா அவர்களை ஒருவார காலத்திற்குப் பரோலில் விடுதலை செய்யும்படி முதலமைச்சர் ஆணையிட்டார்.

25—12—63 அன்று மாலை மருத்துவமனையில் இருந்து பரோலில் விடுதலையான அண்ணா அவர்கள், தன் சிறிய தாயாரைக் காண காஞ்சீபுரம் சென்றார்கள்.

பொங்கல் திருநாளன்று
புதுமைத் தமிழ் விருந்து!

**திராவிடன்**
**பொங்கல் மலர்**
**(1964)**

பொங்கல் மலர் வரிசையில்
திராவிடன் படைத்திடும்

**17-வது**
**பொங்கல் மலர்**

•

எழிலும் ஏற்றமும் நிரம்ப தயாராகிறது!

○

வழக்கம் போல எல்லாச் சிறப்புகளும் உண்டு.

○

விலை, மற்ற விவரம்
அடுத்த இதழில்

முதல் பக்கத் தொடர்ச்சி

தி. மு. கழக வேட்பாளராகக் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட போது, சென்னையை 'ஏ' பிரிவு நகராக்கும் பிரச்சினையையும் ஒரு முக்கிய பிரச்னையாக வைத்து வாக்காளர்களைச் சந்தித்தார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி என்ற முறையில், தான் வாக்காளர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையை நிறைவேற்றியமைக்காக குறிப்பாகத் தென்சென்னைப் பாராளுமன்ற தொகுதி வாக்காளர்கள்—பொதுவாக சென்னை நகர மக்கள்,—சிறப்பாக தென்னக மக்கள் ஆகியோரின் சிறந்த பாராட்டுதல்களுக்கும் அரசுத்துறை ஊழியர்களின் அன்புக்கும் உரியவராகிறார்.

கழகத்தின் குரலை உரிய முறையில் வெற்றிக் குரலாக முழங்கச் செய்த தி. மு. க. பாராளுமன்றக் குழுவினரின் சாதனை பாராட்டிற்குரியதாகும் என்பதோடு-கழகம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியிலும் நூற்றுக்கு நூறு நியாயம் இருப்பதை சென்னை மாநகரம் 'ஏ' பிரிவு நகராகும் பிரச்சினை மிகத் தெளிவாக நிரூபித்து விட்டது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

**என்.வி.என். சோமு**
**பி. ஏ.**

# உரிமை காப்போம்! பெருமை சேர்ப்போம்!

தி. பொன்னுசாமி

உலகத்தில் இன்றைய தினம் மொழி உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கின்ற இனம் ஒன்று உண்டென்றல் அது தமிழ் இனம்தான்!

இந்தியாவிலும் — இலங்கையிலும் இன்றைய தினம் தமிழர்கள் தனது தாய்மொழி தமிழுக்காக பல தியாகங்களைச் செய்து போராடிக் கொண்டிருக்கிறர்கள். இங்கு (இந்தியாவில்) மத்திய ஆட்சி மொழியாக இந்தி ஆக்கப்படுவதாலும்—அங்கு (இலங்கையில்) ஆட்சி மொழியாக சிங்களம் ஆக்கப்படுவதாலும் தமிழ் மொழிக்கும்—தமிழர்களுக்கும் ஏற்படும் தீங்கினை உணர்ந்தே இந்தியாவிலும்—இலங்கையிலும் ஆட்சி மொழிக் கொள்கையை எதிர்த்து தமிழர்கள் போர்க்கொடி உயர்த்தி இருக்கின்றனர்.

ஆட்சி மொழி விஷயத்தில் இங்கு இந்தி வெறியர்களும்—அங்கு சிங்கள வெறியர்களும் ஒரே பிடிவாதமாகவே இருந்து வருகின்றனர்.

இங்கு இந்தியை ஆட்சிமொழியாக்குவதற்கு இந்தி வெறியர்கள் கையாளுகிற முறைகளும்—நிறைவேற்றுகின்ற சட்டங்களைப் போலவே, இலங்கையில் சிங்கள வெறியர்கள் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவதற்காக செய்கிறர்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையிலிருந்து ஒரு குழு ஒன்று இந்தியாவிற்கு வந்து, இந்தியை ஆட்சிமொழியாக்கும் விதம்பற்றி இந்தி வெறியர்களிடம் பாடம் கேட்டுச் சென்றர்கள். இந்தி வெறியர்களிடம் பாடம் கேட்ட சிங்களவர்களும் மொழி வெறி உணர்வு கொண்டனர்; அதன் விளைவை இலங்கைவாழ் தமிழர்கள் இன்றைய தினம் அனுபவித்து அல்லற்பட்டு வருகிறர்கள்.

இந்தி வெறியர்—சிங்கள வெறியர் இருவரின் போக்கும்—நோக்கும் ஒரே தன்மையுடையதாய் இருக்கின்ற காரணத்தினல், இரு நாட்டிலும் இன்று மொழிப் பிரச்சினை ஒரே தன்மையில் எழுப்பப்பட்டிருக்கிறது. இரண்டு வெறியர்களாலும் பாதிக்கப்படுவது தமிழ் மொழியாகவும் — தமிழர்களாகவும் இருக்கின்றனர்.

இலங்கையில் 1964-ம்ஆண்டு சனவரி முதல் தேதியிலிருந்து சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாகிறது. இதன் விளைவாக பத்து ஆயிரம் தமிழர்கள் அரசாங்கத்தில் வகிக்கும் பதவியிலிருந்து விலகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை இங்கு இந்தி ஆட்சிமொழியானல் ஏற்படாது என்று எண்ணுகிறீர்களா?

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 18—8—63 'கல்கி' இதழில் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதியை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்,

"சமீபத்தில் டெல்லி சர்க்காரில் உயர்ந்த பதவி வகிக்கும் ஒரு தென்னட்டுக்காரரிடம் உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 'இந்தி ஆட்சிமொழியானல் நாங்கள் எல்லாம் டெல்லியை விட்டு வெளியேற வேண்டியதுதான், என்று மனக் கொதிப்போடு—வேதனை ததும்பக் கூறினர்.'"

திரு எம். ஜி. இாாமச்சந்திரன் அவர்களிடம் கூறிய அந்தப் பெரிய அதிகாரியின் மனக் குமுறல் எதைக் காட்டுகிறது?

இந்தி ஆட்சி மொழியானல் இந்தி பேசாத—தெரியாத தென்னட்டு மக்கள் அரசாங்கத்தில் பணியாற்ற முடியாது—பதவிபெற முடியாது: இலங்கையைப்போல் இங்கும் கட்டாயமாக பதவி விலகவேண்டிய நிலை தமிழர்களுக்கும்—மற்ற இந்தி பேசாத பகுதியினருக்கும் ஏற்படவே செய்யும்.

எனவே, இந்தி ஆட்சி மொழியானல், தமிழர்களும் — இந்தி பேசாத பகுதி மக்களும் மத்திய அரசாங்கத்தில் பணியாற்ற முடியாது என்பதும் — பதவி உயர்வு பெற முடியாது போகும் என்பதுவும் நிச்சயிக்கப்பட்டதாகிறது. இலங்கையின் நடவடிக்கை இதை நமக்கு நிரூபித்துக் காட்டியபடி இருக்கிறது.

இலங்கையில் ஆட்சிமொழிச் சட்டத்தை எதிர்த்து இன்று மூன்று வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன. ஒன்று 55 வயதுக்கு மேல் அரசாங்கத்தில் பதவி நீடிப்புக்கு சிங்களமொழி தேர்ச்சி அவசியம் என்று கூறும் சட்ட விதியை எதிர்த்தும்—மற்றஇரண்டும், சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்ற அரசாங்க அதிகாரிகளுக்கு மட்டுமே ஊதிய உயர்வு கொடுக்கப்படும் என்ற விதியை எதிர்த்தும் வழக்கு இருக்கிறது.

இலங்கையின் இந்த நிலைதான் இந்தியாவிலும் இருக்கிறது.

ஆட்சிமொழியாக வரும் இந்தியை மத்திய அரசாங்கத்தில் பணியாற்றக் கூடிய இந்தி பேசாத பகுதியைச் சேர்ந்தவர்கள்-அவர்கள் வயதில் முதிர்ந்தவர்கள் ஆனலும், சர்க்கார் நடத்தும் இந்தி வகுப்பிற்குச் சென்று இந்தி மொழியை கற்றுக்கொள்ளவேண்டும்; இந்தி வகுப்பிற்குச் செலலாத ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலை இருக்கிறது!


பாராளுமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர் திருமதி யசோதா ரெட்டி, "இந்தி மொழி தேர்ச்சி தனது கணவருக்கு இல்லையாகையால் ஊதிய உயர்வும் பதவி உயர்வும் கிடைக்கவில்லை" என்று கூறியதை நினைவில் கொண்டு பார்த்தால், இலங்கை நிலைக்கு இங்கு எதுவும் மாறுபட்டு இருக்கவில்லை என்பது தெரிய வரும். எனவே, இலங்கையைப் போல் இங்கும் இந்தி மொழி தெரியாத பல அரசாங்க ஊழியர்கள் கட்டாயமாக வீட்டிற்கு அனுப்பப்பட்டு, எல்லா பதவியிலும் இந்திக்காரர்களின் ஆதிக்கம் எதிர்காலத்தில் நிலைபெற்று விடும்.

ஒரே மொழியே ஆட்சிமொழி ஆக்கப்படும்போது, பிற மொழியினருக்கு என்னென்ன இன்னல்கள் ஏற்படுகிறதென்பதைக் கவனிப்போம்.

1. ஆட்சிமொழி, தனிப்பட்ட அன்னியர்கள் மீதும் திணிக்கப்படுகிறது (உதாரணமாக, பயணச் சீட்டில்—படிக்கல்லில் — தராசில் —நாணயத்தில்— மைல் கல்லில் இந்தி மொழி இருப்பதைப் போல)
2. தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் பலவகையான இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறர்கள்.
3. அநேக இலாக்காக்களில் தமிழ் பேசும் ஊழியர்கள் மூலை முடுக்குகளில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறர்கள்.
4. ஆட்சிமொழி அமுலின் கெடுபிடியால் பதவி உயர்வுக்கு முழுக்குப் போடப்பட்டுள்ளன.
5. சம்பள உயர்வுக்கு முற்றுப் புள்ளி போடப்பட்டுள்ளது.
6. ஆட்சிமொழி தெரியாதென்ற அடிப்படையில் இன்று ஓர் இடமும் நாளை ஓர் இடமுமாக அங்குமிங்குமாக இடம் மாற்றம் செய்யப்பட்டு வருகிறர்கள்.

மேலே குறிப்பிட்டுள்ள இவ்வளவும் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற வெறித்தன்மையால் இலங்கையில் ஏற்பட்டுள்ள பரிதாபமான நிலை; இந்தநிலை இலங்கையில்தானே என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள். பல மொழி பேசும் மக்கள் வாழும் ஒரு நாட்டில் ஒரே மொழிதான் ஆட்சி மொழி என்று ஆக்கப்படும் எந்த நாட்டிலும் இந்த நிலைமை ஏற்பட்டே தீரும்! எனவே, இங்கும் இந்தி மொழி மட்டுமே ஆட்சி மொழி ஆக்கப்பட்டுவிட்டால் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு

(6-ம் பக்கம் பார்க்க)



## அறிஞர் அண்ணா
மற்றும் கழகத் தோழர்கள்
## சிறையில் இன்று 43-வது நாள்

# இந்தித் திணிப்பால் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாவர்!

## நீதிமன்றத்தில் பேராசிரியர் அன்பழகன் வாக்குமூலம்



19—11—64 அன்று பேராசிரியர் க. அன்பழகன் அணியினர் ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் தந்த வாக்குமூலம் வருமாறு;

மதிப்பிற்குரிய நடுவர் அவர்களே!

வணக்கம். இந்த வழக்கில் இந்தியத் தண்டனைச் சட்ட 143-வது பிரிவின்படியும், குற்றச் சட்டதிருத்த விதியின் 7.வது பிரிவின்படியும் நானும் எனது தோழர்கள் நால்வரும் குற்றம் சாட்டப்பட்டுள்ளோம்.

இதற்குக் காரணமாக 'இந்தித் திணிப்புக் கண்டனத்திற்காக தி. மு. கழகம் மேற்கொண்ட அறப்போரில் ஒரு துறையான மத்திய அலுவலக மறியல் நடவடிக்கையில் நாங்கள் ஈடுபட்டது குறித்து எங்கள் நிலையைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

இந்தக் குற்றச்சாட்டுகளை அடியோடு மறுப்பதும் எதிர் வழக்காட முனைவதும் என் விருப்பமல்ல. நாங்கள் மேற்கொண்ட உயர்ந்த குறிக்கோளுக்கு ஒத்ததுமல்ல.

ஆனால், நாங்கள் ஈடுபட்ட மறியலில் பலாத்காரமாக நடந்து கொண்டோம் என்னும் கருத்து குற்றச்சாட்டில் இடம் பெறுவதை ஒப்புக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். இந்தித் திணிப்பைக் கண்டிப்பதற்கு அடையாளமாக நாட்டு மக்களின் உள்ளக் குமுறலையும் வேதனையையும் வெளிப்படுத்துவதற்கு ஒருவழியாகக் கழகம் மேற்கொண்ட இந்த மறியலில் வன்முறைச் செயலோ, கட்டாயமோ குழப்பமோ ஏற்பட இடம் தரக்கூடாது என்பது கழகத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் ஆணையாகும்.

நாங்கள் ஈடுபட்ட மறியல் நிகழ்ச்சியும் அமைதியாகவும் ஒழுங்காகவும் காவலர் கடமை தடைபடாமலுமே நடைபெற்றது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உண்மையில் நாங்கள் சட்டத்தை மதிக்காதவர்களோ, சட்டத்தை உடைக்க வேண்டுமென்ற நோக்கமுடையவர்களோ அல்லர்.

ஆனால் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் தாம் இயற்றும் சட்டத்தால் மக்களுக்கு அநீதி இழைக்கின்ற போது, அந்த அநீதியை ஆதிக்க வெறியால் நிரந்தரமாக்கும்போது, அந்த அநீதியை கைவிடுமாறு தூண்ட வழிகளும் முறைகளும் பயனற்று விடும்போது மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையை நிறைவேற்ற இதைப்போன்று சட்டத்தின் கோபத்திற்கு எங்களையே நாங்கள் ஆளாக்கிக் கொள்ள வேண்டியவர்களாகின்றோம்.

நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினன் என்னும் முறையில் சட்டங்கள் உருவாகும் நிலையில் பங்கு கொள்வதோடு அதன் அவசியத்தையும் உணர்கிறேன். ஆனால், சட்டமன்றங்களில் உள்ள பெரும்பான்மை வலிவு காரணமாக, சட்டங்கள் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களின் தன்னிச்சையின்படி உருப் பெறுவதையும் காண்கிறேன். குடிமகன் என்ற நிலையில் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் நுகருகின்றேன்.

ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சியினன் என்ற வகையில் குடிமக்கள் உரிமையை நிலைநாட்ட குறை போக்க, இப்படிப்பட்ட அறப்போரில் ஈடுபட்டு கடமையைச் செய்வதின் மூலம் சட்டத்தின் தாக்குதலை தாங்கிக் கொள்ளவும் கடமைப்பட்டவனாகிறேன் என்பதையும் நம்புகிறேன். எனவேதான் இந்த மறியலில் நான் ஈடுபட வேண்டியவனானேன்.

இந்திய யூனியன் ஆட்சி மொழியாக 'இந்தி' ஆக்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்டுள்ள பல கோடி மக்களுள் நானும் ஒருவன்.

**அரசியல் சட்டம் உருவாகும் போதும் அதற்கு முன்னும் பின்னும் இந்தி பேசாத மக்களும் குறிப்பாகத் தென்னக மக்களும் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள மறுப்புத் தெரிவித்து வந்துள்ளனர்.**

இதற்கு முன்னும் பல போராட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன. தமிழகத்தில் கடந்த 25 ஆண்டுகளாகவே இந்தி எதிர்ப்பு ஒரு தொடர் கதையாகவே வளர்ந்து வந்துள்ளது. எனினும், இந்தி வெளிப்படையாகவும், மறைமுகமாகவும், ஆணையின் மீதும், நயவஞ்சகமாகவும், மத்திய அரசாலும் மாநில அரசாலும் திணிக்கப்பட்டு வருகின்றது.

இந்தி, இந்தியாவில் பெரும்பான்மையோர் அறிந்த மொழியல்ல. ஆட்சி மொழியாகக் கொண்டு வரப்படும் 'கடிபோலி' இந்தியின் சொல்நடை பல்வேறு இந்திகளைப் பேசும் இந்தி இனத்தவருக்கே தெளிவு தருவதுமல்ல என்பதும், 'இந்தி இன்று நாளும் வளர்ந்து வரும் குடியாட்சி முறையில் நடத்தப்படவேண்டிய நிர்வாகத்திற்குத் தேவையான திறன் உடையதுமல்ல; மத்திய அரசின் வெளிநாட்டு விவகாரத் தொடர்புக்குத் தேவையான திட்பமும் தெளிவும் உடையதுமல்ல என்பதும்; இந்தி இந்தியாவிலுள்ள பழம்பெரும் இலக்கிய வளர்ச்சி கொண்ட தமிழ் தெலுங்கு, வங்காளி மராத்தி போன்ற மொழிகளுக்கு ஈடானதுமல்ல: இயற்கையாகவே வளர்க்கின்ற அடிப்படை ஆற்றல் கொண்டதும் அல்ல என்பதும், இந்தி இன்றைய சட்டமன்றக் கடமையை நிறைவேற்றக் கூடியதுமல்ல என்பதும் நீதிமன்றத்தின் உயர்வைக் காக்கக் கூடியதுமல்ல என்பதும், பலகாறும் பலப்பல பேரறிவாளர்களால் தெளிவுபடுத்தப்பட்டுள்ள போதே இந்தி வெறியர்களின் விருப்பத்திற்காக அது ஆட்சிபீடத்தில் ஏற்றப்பட்டுள்ளது.

நாற்பத்திநான்கு கோடி மக்களைக் கொண்ட இந்தியாவில் அரசியல் சட்டத்திலேயே ஏற்கப்பட்ட தேசிய மொழிகள் 14-ம், தனிமொழிகள் 150-ம், கிளை மொழிகள் எழுநூற்றுக்கு மேற்பட்டுள்ளன. இவைகளுள்ளும் ஒரேயொரு மொழி அதுவும் 80 வகைப்பட்ட இந்திகளுள்ளும் ஒரு வகையான கடிபோலி இந்தி—டில்லி மீரட் வட்டாரத்தினர் மட்டுமே பயன்படுத்தப்படும் இந்தி—ஒரு நூற்றாண்டு கால அளவும் வளராத இந்தி—துளசிதாஸ் இராமாயணம் எழுதப்பட்டுள்ள அவதி இந்தியினும் வேறுபட்ட இந்தி-தொடக்க நிலை வளர்ச்சியிலுள்ள இந்தி — ஒரு கோடிக்கு மேல், இரண்டு கோடிக்கு உட்பட்ட மக்களுக்கே தெளிவு தரக்கூடிய இந்தி—இந்தியா முழுமைக்கும் மத்திய ஆட்சிமொழியாக ஆக்கப்படுவது நெடுங்கால அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டதால் ஏற்பட்ட அளவு மீறிய மகிழ்ச்சியால் ஏற்பட்டுள்ள குழம்பிய மனத்தின் விளைவேயாகவேண்டும்.

தேசிய மொழிகள் என்றாலே நாட்டு மொழிகள் என்றே பொருள்படும். நாட்டு மொழிகள் நாடு சுதந்திரம் பெறும் காலத்தில்தாம் இடம் பெறும். நாட்டின் முழு ஆட்சி மொழிகள் ஆக வேண்டியவை.

ஆனல் பல்வேறு தேசிய மொழிகளும் அவ்வப்பகுதிகளுக்கு மட்டுமே ஆட்சிமொழிகளாகும் போது இந்தி மட்டும் மத்திய ஆட்சிமொழியாக்கப்படுகிறது.

இந்தியாவிலுள்ள மக்கள் எம்மொழி பேசுவோராயினும் சரி மத்திய அரசில் சம வாய்ப்பு பெறுவதே முறைமை; நியாயம்.

இந்தி, மத்திய ஆட்சி மொழியாவதால் இந்தி பேசும் மக்கள் தமது உரிமையை முழு அளவு நிறைவேற்றிக் கொள்ளுகின்றனர்; பிறமொழி பேசும் தமிழர் தெலுங்கர் போன்றவர்கள் 'தத்தம் தாய்மொழி மூலம் மத்திய அரசில் தமது உரிமையைப் பெறுவதற்கு வழியில்லை.

ஒரு வட்டாரத்தினர் தமது தாய்மொழி மத்திய ஆட்சிமொழியாவதால் அடையும் உரிமை, நல்வாய்ப்பு ஆதிக்கம் அண்மைத் தொடர்பு ஏற்றம் ஆகிய அனைத்தும் பிற மொழி பேசும் வட்டத்தினருக்கெல்லாம்— இந்தியாவில் வாழும் பெரும்பான்மையோருக்கு மறுக்கப்படுகின்றன. குறிப்பாகத் தென்னக மக்கள் தமது வாழ்க்கை, மொழி, கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்ருேடு எவ்விதத் தொடர்பும் இல்லாத எதற்கும், வேண்டப்படாத எந்நிலையிலும் விரும்பத்தகாத ஒரு வேண்டும். ஆந்திரரும் தெலுங்கோடு இந்தி பயின்று பிழைக்க வேண்டும். வங்காளியும், மராட்டியும், கருநாடகத்தாரும், கேரளத்தாரும் வேறு பலரும் அப்படியே இந்திக்காரரோ, வேருெரு தேசிய மொழியின் பயிற்சியும் அறிவும் தேவையின்றி தம் தாய்மொழி கற்ற அளவுடனே தலை நிமிர்ந்து நிற்பர். இந்த நிலை இந்திய மக்களை இரண்டு கூருகப் பிரிக்கவில்லையா?

பன்மொழிப் புலவரும் இந்தி மொழியிலே நூல்கள் இயற்றிப் பட்டம் பெற்றவருப்—மொழிநூல் ஆராய்ச்சியாளரும், மேற்கு வங்க சட்டமன்ற மேலவைத் தலைவருமான மதிப்பிற்குரிய சுனீத்குமார் சட்டர்ஜி அவர்கள் பாராளுமன்ற ஆட்சிமொழிக் குழுவின் உறுப்பினர் என்ற முறையில், அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கருத்து இதுவாகும்.

"இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவதில் இந்திமொழிக்குரியவர்கள் காட்டும் அளவுக்கு மீறிய ஆர்வமும்—ஆவேசமும் அரசாங்கத்தின் பல்வேறு துறையிலும் ஆங்கிலத்தை நீக்கி இந்தியைப் புகுத்துவதற்கு எடுத்து வரும் நடவடிக்கைகளும் இந்தி பேசாத பெரும்பான்மையான மக்களை இரண்டாந்தரக் குடி மக்க தவிர வேறு வழி எங்களுக்கு ஏதுமில்லை என்பதைப் பணிவன்போடு தெரிவிக்க வேண்டியவனுக உள்ளேன்.

இப்படிப்பட்ட பலமான எதிர்ப்பின் காரணமாகவே இந்தியாவின் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள், இந்தி மொழி பேசாத மக்களுக்கு ஓர் உறுதிமொழி வழங்க முன்வந்தார்.

பலமுறை அவராலேயே உரைக்கப்பட்ட அந்த உறுதிமொழி இந்தி பேசாத மக்களின்—குறிப்பாகத் தென்னுட்டவரின் ஒப்புதலைப் பெறுகின்ற காலம்வரை யூனியன் ஆட்சி மொழியாகவுள்ள ஆங்கிலம் நீடிக்கப்படும். இந்தி மொழி ஒரு நாளும் திணிக்கப்பட மாட்டாது என்பதாகும்.

இந்தி மொழி பேசாத மக்களுக்கெல்லாம் அதுவே கவலை தீர்க்கும் மருந்தாயிற்று. இந்த உறுதி எப்படி காப்பாற்றப்படும் என்றே நம்பினர். ஆனல் நிகழ்ந்ததோ வேறு விதம்.

அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆட்சி மொழிகள் சட்டத்தில் அரசியல் சட்டத்தில் விதிக்கப்பட்டவாறே, இந்தி மொழி 1965 சனவரி முதல் மூடி சூடப்படுகின்றது. ஆட்சி மொழியின் முழு அந்தஸ்தையும் அதிகாரத்தையும் பெறுகின்றது.

மொழியாகும் என்னும் நிலைகூட இல்லை.

கடந்த சில ஆண்டுகளாகவே மத்திய அரசின் பல்வேறு இலாக்காக்களில் இந்தி ஆட்சி மொழி யாவதற்கான ஒத்திகை, மக்கள் வரிப்பணத்தில் பல கோடிக் கணக்கான ரூபாய் வீண் செலவில் நடத்தப்பட்டு வருகிறது. தலைமை அமைச்சர் நேரு அவர்கள் ஒருநாளும் இந்தி திணிக்கப்படமாட்டாது என்று கூறியதற்கு மாருக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வழியிலும் கட்டாயமாகத் திணிக்கப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக அண்மையில் வெளியிடப்பட்ட யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் அறிவிப்பு ஒன்று இரயில்வே துறைக்கான உத்தியோகத்திற்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படும் நிலையிலேயே இந்தித் தேர்ச்சி கேட்கப்படுவதைத் தெளிவுபடுத்துகிறது. அந்த அறிவிப்பின் ஒரு பகுதி இது,

(ஆங்கிலத்திலிருந்த அறிவிப்பைப் பேராசிரியர் படித்துக் காட்டினர்.)

இந்த அறிவிப்பு விளக்கும் உண்மை யாது? இந்தி தேர்ச்சி கட்டாயப்படுத்தப் படுவதுமன்றி, அம்மொழியினர் அல்லாதார் அத்

# தாங்கள் அளிக்கும் தீர்ப்பு நாங்கள் தமிழன்னைக்குச் செலுத்தும் காணிக்கை!

அன்னிய மொழியின் ஆட்சிக்கு உட்படும் கொடுமை விளைந்துள்ளது.

மேலும் இந்தி பேசும் மாநிலங்களான உத்தரப்பிரதேசம், பீகார் மத்தியப் பிரதேசம் ஆகியவற்றிலே இந்தி இன்னும் முழு ஆட்சி மொழியாகவில்லை. இந்தியில் நிர்வாகம் ஒழுங்கு பெறவில்லை. அந்த வட்டாரத்திலேயே இந்திக் குழப்பம் இன்னும் தீரவில்லை.

இந்நிலையில் அந்தப் பகுதியினின்று நெடுந் தொலைவிலுள்ள வேறு இன மக்களுக்கும் இந்தி ஆட்சிமொழியாகத் திணிக்கப்படுவதை எப்படி பொறுப்பது?

இந்தி ஆட்சி மொழியாவதால் தமிழர்கள், ஆந்திரர்கள், கருநாடகத்தார், கேரளத்தார், வங்காளிகள் முதலானேர் தமது தாய்மொழியில் தேர்ச்சி பெற்றுல் மட்டும் குடி உரிமையின் பயனை அடைய முடியாத நிலை உள்ளது. இந்தி கற்ருக வேண்டிய சுமை ஏறுகிறது.

ஆனல், இந்தி தவிர வேறு மொழி கற்காமலே எந்தச் சுமையும் இல்லாமலே இந்தி மக்கள் கற்றவராக முடிகிறது. இந்தி மக்களின் ஒரு மொழி அறிவையும் வெல்லும் வாய்ப்பு எளிதாக வழங்கப்பட்டு விட்டது.

தமிழர் தமக்குயிரான தமிழோடு இந்தியும் பயின்று வாழளாகவும் ஒதுக்கவும் தாழ்த்தவுமே வழி செய்யும் என்பதை நான் எச்சரிக்க வேண்டியவனுக இருக்கிறேன்.

இதை அவர் பல்வேறு ஆதாரங்களுடன் அவர் குறிப்பிட்டார்.

பன்மொழிப் புலவர் மட்டுமல்ல, பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள், அரசியல் மேதைகள், விஞ்ஞான வித்தகர்கள், மக்கள் தலைவர்கள், முன்னுள் காங்கிரசுத் தலைவர்கள் ஆகிய பலரும் பலமுறையும் இந்தித் திணிப்பைக் கண்டித்துள்ளனர். சட்டமன்றங்கள் பலவற்றிலும், பாராளுமன்றத்திலும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

எனினும் மக்கள் நிரம்பிய சந்தையில் கட்டறுத்துக் கொண்ட காளை மிரட்சியினுல் வெறிகொண்டு பலரையும் முட்டி மோதிப் பாய்ந்தோடி வருவது போன்று 'இந்தி' வந்துள்ளது.

காளையின் வெறிப் பாய்ச்சலுக்குத் தன் தாய் பலியாகாது காக்க முன்வரும் இளைஞனைப் போன்று தாய்மொழியாம் தமிழைக் காக்க, தமிழர்களை மீட்க, இந்திக் காளையின் ஆட்சி மொழிச்சட்டம் என்னும் கொம்பைப் பிடித்து அடக்க கழகம் போராடுகிறது.

இதனுல் ஏற்படும் குருதி கொட்டும் துயரை, தியாகத் தழும்பாக ஏற்க கழகத் தோழர்கள் முன் வந்துள்ளனர். இது

ஆங்கிலமும் நீடிக்கப்படலாம் என்ற வகையில் இங்கிலீஷ் 'மே கண்டின்யூ' என்ற தொடரால் ஆங்கிலம் நுழைவுச் சீட்டுப் பெறுகிறது.

முடிசூடிய அரசியாக இந்தியும் —அதன் இயலாமையையும் அறியாமையையும் அவ்வப்போது நிறைவு செய்ய ஏவலுக்கு ஆங்கிலமும் என்னும் நிலை உறுதி பெறுகிறது.

இதனுல் மத்திய அரசும் அதன் தலைமை அமைச்சரும் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழி தவறிவிட்டது மட்டுமல்ல ஒரு வகை நம்பிக்கைத் துரோகமும் இழைக்கப்பட்டு விட்டது.

இந்தச் சட்டப்படி இந்தி மட்டுமல்ல—ஆங்கிலமும் கால வரம்பின்றி நீடிக்கலாமே என்று சிலர் கூறுவதையும் காண்கிறேன். இன்னும் பத்து ஆண்டுகளில் மறுபடியும் நியமிக்கப்படும் பாராளுமன்ற குழு ஒன்று இந்தியை கொண்டு மட்டுமே ஆட்சி நடைபெறலாமா? என்பதை ஆராய்ந்து கூறுவர் என்பதை அறிவோடு காணும் எவரும் ஆங்கில ஒட்டு உறவும் இன்றி அடியோடு விலக்கப்படும் நாளை விரைவுபடுத்தவே இச் சட்டம் கருவியாக உள்ளது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்வர்.

அதுமட்டுமல்ல. இனி வரும் 1968-ல்தான் இந்தி ஆட்சி தேர்ச்சி பெறத் தவறினுல் ஊதிய உயர்வும் அலுவல் நிரந்தரமாவதும், தடைபடுவதன்றி, அவர்கள் அலுவலில் இருந்து விரட்டப்படுவர் என்பதுதானே? இது 'இந்தி' பேசாத மக்களுக்கு அரசு திட்டமிட்டுச் செய்யும் அநீதியன்ருே!

இன்றேகூட இந்தியாவின் குடியரசுத் தலைவர் அவர்கட்கு, தமிழ்மொழியிலேயே எழுதப்படும் வேண்டுகோளுக்கும், இந்தியிலேயே பதில் தரப்படுகின்றது. தேசிய மொழிகளிலே ஒன்ருன தமிழிலே எழுதுவோர்க்கு குடியரசுத் தலைவரின் அலுவலகம் இந்தியிலேயே பதிலளிக்கும் முறையால் பதிலைப் பெற்றவர் அதனை அறியாது அடையும் அவலமும் தமிழ்மொழி ஒதுக்கப்படும் இழிவும் ஏற்படுவதை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்?

இந்நிலையில் இன்று இந்தி இல்லாத பிற மொழி பேசும் மக்களின் குடியாட்சி உரிமையைக் காத்துக் கொள்ளுதற்கு இன்றியமையாத தொடர்பு மொழியாகப் பயன்பட்டு வரும் உலக மொழியாம் ஆங்கிலத்தையும் ஒதுக்கிவிட்டு, இந்தி தவிர்த்த பிற தேசிய மொழிகள் எல்லாவற்றுக்கும் மத்திய ஆட்சிமொழி உரிமை அளிக்காமல் ஒடுக்கி விட்டு, இந்தி மொழியையே தனி முழு ஆட்சி மொழியாகக் கொண்டுவரும் திட்டமிட்ட நடவடிக்கைகள் யாவும், பிற மொழி

(6-ம் பக்கம் பார்க்க)

## 3-ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்படக்கூடிய ஆபத்தான விளைவுகளின் முன்னறிவிப்பே இலங்கையில் இன்று நடப்பதும்—மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளதும்.

1964ம் ஆண்டு சனவரி முதல் சிங்களம் ஆட்சிமொழி ஆகிறது; ஆனால் அதற்கு முன்பே இரயில்வே பகுதி—தபால் தகவல் பகுதி—குடியேற்ற வெளியேற்றப் பகுதி ஆகியவைகள் எல்லாம் இப்போதே (1963-லேயே) சிங்களத்தில் வேலை செய்ய ஆரம்பித்துள்ளன.

அதைப்போலவே இங்கும் 1965 முதல் இந்தி ஆட்சிமொழியாக்கப்படுவதற்கு முன்பே, ரயில்வேயில்—தபால் தந்தி இலாக்காவில் — நாணயத்தில் — தராசுகளில்—படிக்கல்லில்—மைல் கல்லில்—பள்ளிகளில்—பயணச் சீட்டில்—வருமான வரி இலாகாவில்—சுங்க இலாகாவில் பாராளுமன்றத்தில்—சட்டத்தில்—நீதி மன்றத்தில் எல்லாவற்றிலும் இந்தி புகுத்தப்பட்டிருக்கிறது.

இந்தியை யார் மீதும் புகுத்தப்பட மாட்டாது என்போரே! இவைகளில் எல்லாம் இந்தி எப்படிப் புகுந்தது? யார் மீதும் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று போலி உறுதிமொழி தரும் நேரு பண்டிதரே! இவைகளில் எல்லாம் இந்தியை திணித்தது யார்?

இந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாக்கப் பட்டால் இந்தி பேசாத பகுதி மக்கள் இரண்டாந்தர குடிமக்களாக அவமதிப்புக்கு ஆளாக நேரிடும் என்ற குற்றச்சாட்டை இந்தி ஆதரவாளர்களால்—பக்தவத்சலத்தால்-காமராசரால் மறுத்துரைக்க துணிவுண்டா? முடியுமா?

இந்தி ஆட்சிமொழி என்று சட்டத்தில் ஏறியபிறகு இந்தி மொழியினரால் அவமதிப்புக்கு ஆளானவர்கள் யார்? இந்தி மொழி பேசாத பிற பகுதி மக்களின் தலைவர்களே அவமதிக்கப் பட்டனரே! இந்திக்காரர்களால் தான் அந்தத் தலைவர்கள் அவமதிக்கப்பட்டனர் என்பதை மறுக்க முடியுமா?

ஆச்சாரியார் — இராதாகிருஷ்ணன் — அனந்தசயனம் (ஐயங்கார்)—இலட்சுமிமேனன் போன்ற மதிப்பிற்குரிய தலைவர்களையே இந்தி வெறியர்கள் பேச விடாமல் தடுத்து கூச்சலிட்டார்கள் என்றால், இந்தி பேசாத பிற மொழி சாதாரண மக்களை அவர்கள் எந்த அளவு மதிப்பார்கள்—எப்படி மதிப்பார்கள்?

இந்திக்காரர்களுக்கு அத்தகைய அவமரியாதை இந்தி பேசாத பிறமொழி மக்களால் எங்காவது ஏற்பட்டதென்று கூற முடியுமா? இந்திக்காரர்களுக்கு ஏற்படாத அவமரியாதை—இந்தி பேசாத பகுதி மக்களுக்கு மட்டும் இந்திக்காரர்களால் ஏற்படுவானேன்?

ஆட்சிமொழிச் சட்டம் இந்திக்காரர்களுக்கு சலுகையும்—இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அவமதிப்பும் ஏற்படுத்தக்கூடிய நிலையையும் — இந்திக்காரர்களுக்கு தாங்கள் மேலானவர்கள் என்ற உணர்வையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் இருக்கிறது.

இலங்கையில் நமது உடன் பிறந்தவன் — தமிழன் மொழி உரிமை பறிக்கப்பட்டு—சிங்கள மொழி வெறியர்களால் தாய்த் தமிழ் அழிக்கப்படுவதைக் கண்டு தமிழன் இரண்டாந்தரக் குடிமகனாக ஆக்கப்படுவதைக் கண்டு எத்தகைய வேதனை உணர்வோடு வாழ்கிறானோ — அதே வேதனை உணர்வோடுதான் சுதந்திர இந்தியாவில் — ஜனநாயக இந்தியாவில் — சமாதானத்தைப் போதிக்கிற இந்தியாவில் தமிழகத்திலே வாழ்கிற தமிழனும் இருக்கிறான்.

வேற்று நாட்டிலே வாழ்கிற தமிழனும்—சொந்த நாட்டிலே வாழ்கிற தமிழனும் ஒரே விதமான வேதனை உணர்வு கொள்கிறார்கள் என்றால், சொந்த நாடு-சொந்த அரசு என்று எப்படிக் கூறி பெருமைப்பட முடியும்!

தமிழகத்தில் மொழி உரிமைக்காக போர்க்கொடி உயர்த்தப் பட்டுவிட்டது!. உரிமை காப்போம்—பெருமை சேர்ப்போம்!

●

# "வேண்டாம்"

—(0)—

எத்திக்கும் புகழ்பரப்பி ஆண்டோம்; செத்த
இந்திக்கா மண்டியிட்டு கிடப்போம்? சீச்சீ!
தித்திக்கும் நமதருமைத் தமிழைத் தள்ளி,
தீதான இந்தியினை அணைத்தா கொள்வோம்?
புத்தியினால் கொண்டுவரும் திட்டம் என்றால்
போற்றியதை ஏற்றிடுவோம்; புகழ்வோம்! ஆனால்,
கத்தியினால் அச்சுறுத்தக் கருத்தில் கொண்டால்
காத்திருந்தோம் களந்தன்னில்: காண்பாய்; வாவா!

'அன்னியனின் மொழியது ஆங்கிலம்' என்றீர்;
அறிவுலகப் பெருவழியது காண்பாய்; என்றே;
பின்னிருக்கும் விளைவுகளை விளக்கிச் சொன்னால்
பிணைத்திருகை பெருஞ்சிறையில் அடைத்து வைத்தாய்!
பண்ணிருக்கும் தமிழிருக்க பார்வை யற்ற
பாழ்பட்ட இந்தியது வேண்டா மென்றால்
அண்ணாவும் தம்பியையும் அடைத்து வைத்தே
ஆர்க்கின்ற நும் செயல்தாம் நன்றோ சொல்வீர்!

இந்தியே இந்தியென்(று) அலையும் பேயே!
இந்தியினால் விளைகின்ற நன்மை சொல்வாய்?
சிந்தித்துச் சொல்வதற்குச் சொற்க ளுண்டா?
சோர்வுற்றால் படிப்பதற்கு நூல்க ளுண்டா?
விந்தைபுரி விஞ்ஞானக் கலைக ளுண்டா?
விதிக்கின்ற தீர்ப்புக்கு மொழிக ளுண்டா?
செந்தமிழோ(டு) இசைப்பதற்குத் தகுதி யுண்டா?
சிந்தித்துப் பார்ப்பீர்! வேண்டாம்! வேண்டாம்!!

—[தமிழினியன்]—

## 5-ம் பக்கத் தொடர்ச்சி

பேசும் மக்களை எல்லாம்—குறிப்பாகத் தென்னாட்டவரை அரசியல் அந்தகாரத்தில் ஆதிக்கக் காரிருளில் ஆழ்த்துவதே யாகும் என்பது தெளிவு.

அவரவர் தேசிய மொழிகட்கெல்லாம் ஆட்சி மொழி உரிமை மறுக்கப்பட்டுள்ள நிலையில், தொடர்புக்குப் பயன்பட்ட ஆங்கிலமும் விலக்கப்பட்டு இந்தி அந்த இடத்தைப் பிடித்துக் கொள்வதன் மூலம் பிறமொழி பேசும் மக்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் ஆக்கப்படவே அரசாங்கம் வழி செய்துவிட்டது.

**இரண்டாந்தரக் குடிமகனாக ஆவதும் — ஆக்கப் படுவதும் ஒரு வகை அடிமை நிலையை ஏற்பதேயாகும் என்பதை யார் தான் மறுக்கக்கூடும்?**

என்னையும்' இந்நாட்டு மக்களிலே பெரும்பாலோரையும் இன்றைய அரசினர் மேற்கொண்ட நடவடிக்கை இரண்டாந்தரக் குடியாகத் தாழ்த்துகிறது என்பதை உணரும்போது அதற்கு மூலமான இந்தித் திணிப்பை எதிர்ப்பதை எடுத்துக்காட்ட இப்படிப்பட்ட அறப்போராட்டத்தில் ஈடுபடவேண்டிய அவசியம் எனக்கும் என் நண்பர்கட்கும் ஏற்பட்டுள்ளது.

அரசினர் மேற்கொண்ட செயலால் மக்களின் குடியுரிமையும், மொழியுரிமையும் பாதிக்கப்படும் நிலையில் அந்த உரிமைகளை நிலைநிறுத்த வேறு வழியும் வாய்ப்பும், காலமும் இல்லாத நிலையில் நாங்கள் இத்தகைய மறியலில் ஈடுபட்டுள்ளோம்; எனில் அது சட்டப்படி குற்றம் என்றால்- அந்தக் குற்றம் விளையத் தூண்டுதலாகவும், முதல் காரணமாகவும் இருப்பது இன்றைய யூனியன் அரசேயாகும் என்று நான் மனதார நம்புகிறேன்.

நானோ, நான் சார்ந்துள்ள கழகத்தவரோ "அதிதீவிர யுரட்சிக்காரர்களில்லை" அரசைக் கவிழ்க்கவோ, பழிவாங்கவோ திட்டமிடுபவர்களுமில்லை, ஜனநாயக முறையைப் போற்றுபவர்களே.

ஆனால் தாங்கமுடியாத கொடுமைக்கு ஆளாகும்போது குமுறி அழும் மக்களைப் போன்று இந்தி ஆதிக்கக் கொடுமைக்கு ஆளாகும் மக்களின் சார்பில் அவர்களின் நெஞ்சக் குமுறலை வெளிக்காட்ட கண்ணீர்த் துளிகளான நாங்கள் அறப்போராட்டத்தில்—மறியலில் ஈடுபட்டுள்ளோம்.

நீதிக்கும் நியாயத்துக்கும்—உண்மைக்கும் உரிமைக்கும்—மதிப்பும் வலிமையும் ஏற்படச் செய்வதற்கு நல்லோர் நெஞ்சம் நெகிழவும் சான்றோர் கண்ணீர் மல்கவும் தன்னைத்தானே வருத்திக்கொள்ளும் அகிம்சா நெறி அறப்போர் ஒன்றே வழி என்று காந்தியடிகள் உணர்த்திய அவ்வழியேதான், எமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும் எம்மை நடத்திச்செல்கின்றார்.

நானும் எனது அருமைத் தோழர்கள் வ. மணிவண்ணன், இரா. இராமாநுசம், கோ. நாகராசன், ஆர். தங்கராசு ஆகியோரும் அந்த அறப்பாதை வழியேதான் தங்கள் முன்னிலையை அடைந்துள்ளோம்.

நீதியைக் காக்கும் பொறுப்பு மிக்க தாங்கள் அளிக்கும் தீர்ப்பையும் தமிழ் அன்னைக்கு நாங்கள் செலுத்தவேண்டிய காணிக்கை என்றே உள்ளங்கொண்டு மகிழ்ச்சியுடன் ஏற்போம் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க தமிழ்!

# கம்யூனிஸ்ட் குற்றச்சாட்டை மறுத்து அ. பொ. அரசு விளக்கம்

——(0)——

'சென்னை மாநகராட்சிக்கு லாரிகள் வாங்கிய விஷயத்தில் சென்னை மாவட்ட இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியினர் வெளியிட்ட அறிக்கையின்மீது நான் வெளியிட்ட விளக்கத்தைக் குறித்து மேலும் சில விஷயங்களை 'ஜனசக்தி'யில் அவர்கள் வெளியிட்டிருப்பதைக் கண்டேன்.

தி. மு. கழக ஆட்சியினரே இந்த லாரி விஷயங்களில் தவருன முறையில் நடந்துகொள்வதாக அவர்கள் கற்பித்துள்ளார்கள்.

சென்னை மாநகராட்சியின் மத்தியக் குழுவில் எல்லாக் கட்சியினரும் அங்கம் வகிக்கிருர்கள். அத்தகைய குழுதான், "மார்க்கெட்டில் கிடைக்கக்கூடிய எந்த வகை லாரிகளாயினும் வாங்கிக் கொள்ளலாம்" என்று மன்றத்தின் தீர்மானத்தை மாற்றியமைத்தது.

அத்தகைய மாற்றத்தின் அடிப்படையிலேயே காண்டிராக்ட் குழுவும், இந்திய அரசாங்கத்தின் AE/ND 15/3 dated 2—7—63 தேதி அடிப்படையிலும்; தமிழக அரசின் 47769 H. B 3-63 Health: dated 8—7—63 அறிக்கையின் அடிப்படையிலும் மார்க்கெட்டில் கிடைக்கக்கூடிய 'பெட்போர்டு' லாரிகளை வாங்க முடிவு செய்தது. அரசாங்கமே, 'பெட்போர்டு', 'டாட்ஜ்' ஆகிய லாரிகளைச் சிபாரிசு செய்துள்ளது.

பல கட்சிகளும் அங்கம் வகிக்கும் மத்தியக் குழுவே லாரி வாங்கும் விஷயத்தின் கொள்கையைத் திருத்தி அமைத்தமையாலும், 'பார்கோ' கம்பெனியார் டெண்டர்கள் கொடுத்தார்களே தவிர, அதற்குரிய உத்தரவாதப் பணத்தை செலுத்தாத காரணத்தாலும், லாரிகளை வழங்குவதற்கு அவர்கள் விதித்த நிபந்தனைகள் எவ்வகையிலும் நகராட்சிக்கு சாதகமாக அமையவில்லை என்ற காரணத்தாலும் 'பெட்போர்டு' லாரி வாங்குவதால் மொத்தத்தில் ஒரு இலட்சம் ரூபாய் மாநகராட்சிக்குச் சிக்கனம் ஏற்படும் என்ற காரணத்தாலும் 'பார்கோ' கம்பெனியார் லாரிகளை வழங்குவதற்கு அதிகக் கால தவணை கேட்டதாலும், காண்டிராக்ட் குழுவினர், மேற்கூறிய வகையில் சாதகமாய் இருந்த 'பெட்போர்டு' லாரிகளை வாங்கினர்.

**1960-ல், 'பெட் போர்டு' லாரிகளை வாங்குமாறு ஆணையர் குறிப்பு வைத்தபோது, அச்சமயத்தில் நிதிநிலைக் குழு உறுப்பினராக இருந்த பொதுவுடமைக் கட்சிக்காரர், அதை ஆட்சேபித்து, 'பார்கோ லாரிகளையே வாங்கவேண்டும்' என்று வாதாடினர். அப்பொழுது, 'பார்கோ' லாரி வழங்கும் கம்பெனியாரிடம் இவருக்குச் சம்பந்தம் உண்டு—என்று உட்கருத்து கற்பிப்பது நியாயம் ஆகுமா? எனவே, மாநகராட்சிக்குத் தேவையான லாரிகள் வாங்கும் விஷயத்தில் கூட ஒரு குறிப்பிட்ட கட்சியின்மீது உட்கருத்து கற்பிப்பது எந்த வகையிலும் பொருத்தமாகாது.**

**லாரிகள் வாங்குவது சம்பந்தமான தஸ்தாவேசுகள் யாவும் ஆணையாளரிடம் இருக்கின்றன; அவற்றை யார் வேண்டுமானுலும் பார்வையிடலாம். அவ்வாறு செய்வதால் உண்மையான நிலை புலனுகும். அத்தகைய நேரிய முறையைக் கைவிட்டு, பொதுமக்களது உள்ளத்தில் நஞ்சினைப் பாய்ச்சும் நாச வேலையைக் கைவிடுவது தான் நாகரீகமான கட்சிக்கு அழகாகும்.**

நான், மேலே குறிப்பிட்டது போல, எல்லாக் கட்சிகளும் அங்கம் வகிக்கும் மத்தியக்குழு லாரி வாங்கும் விஷயுத்தில் திருத்தியமைத்த தீர்மானத்தின் அடிப்படையில், ஆணையாளரும் உறுப்பினராக உள்ள காண்டிராக்ட் குழு, மாநகராட்சிக்கு எல்லா வகையிலும் சாதகமான சூழ்நிலையில் 'பெட்போர்டு' லாரிகளை வாங்கியதற்குத் தி. மு' க. எந்த வகையிலும் தனிப் பொறுப்பு ஏற்க முடியாது காரணம், லாரிகள் 'வாங்கும் விஷயத்தில் கொள்கை மாற்றத்திற்கு தி. மு. க. மட்டுமே காரணமாக இல்லை. மேலும், காண்டிராக்ட் குழுவில் தி. மு. க. உறுப்பினரோடு பொறுப்புள்ள ஆணையாளரும் ஓர் உறுப்பினராக இருக்கின்ருர்.

மேலும் அரசாங்கத்தாரால் 1—9—63-ல் விற்பனை வரி விகிதாச்சாரம் 7 சதவிகிதத்திலிருந்து 10 சதமாக உயர்த்தப்பட்டது. காண்டிராக்ட் கமிட்டி பரிசீலனைக்கு இந்த லாரி வாங்கும் விஷயம் ஆகஸ்டு மாத இறுதிக்குள் முடிவுசெய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

காலங் கடந்து முடிவு செய்திருந்தால், நகரசபை லாரி ஒன்றுக்கு அதிகப்படியாக விற்பனை வரியில் சுமார் ரூ. 1000-மும் உற்பத்தி விலை அதிகரித்ததின் காரணமாக அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்ட விலை ஏற்றியதாலும், நகரசபைக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டமும் ஏற்பட்டிருக்கும்.

**இதைத் தவிர்த்த நகரசபையின் நடவடிக்கைகளைக் குறை சொல்லுவது என்பது, வேண்டுமென்றே பழி சுமத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பொதுவுடைமைக் கட்சியினரும், மற்றவர்களும் செய்கிருர்கள் என்று நாங்கள் பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.**

இந்த விஷயத்தில், முறை தவறிய நடவடிக்கைகள் ஏதும்இல்லை என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

நகரசபை உபயோகித்திற்கு உடனடியாக லாரிகள் தேவைப்படுகின்ற அவசியத்தைச் சர்க்காரும் ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கன.

இந்த வியாபாரத்தில் அதிக விலை கொடுக்கவில்லை.

சர்க்கார் நிர்ணயித்த விலைக்கே வாங்கப்பட்டிருக்கின்றன.

இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று பொதுவுடமைக் கட்சிக்காரர்கள் 'விரும்புவார்களேயானுல், பொது மேடைகளிலோ அல்லது மக்கள் மன்றத்திலோ விவாதிக்கத் தயாரா?

○

## மு. க., என். வி. என். கைது :

# காயிதே மில்லத் அறிக்கை!

——(0)——

இந்திய யூனியன் முஸ்லிம்லீக் தலைவர் காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தி. மு. கழகத் தலைவர்களான மு. கருணாநிதி அவர்களும், என். வி. நடராசன் அவர்களும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் பங்கு கொள்ள அறிவிக்கப்பட்ட காலம் அதிக நாட்கள் இருந்தும்கூட தற்பொழுது கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.

இத்தகைய செயல் நகராட்சி மன்றத் தேர்தல் வரும் நேரத்திலும் தி. மு. கழகத்தின் எல்லாத் தலைவர்களையும் தமிழக அரசு அவசரமாகப் பிரித்து சிறையிலடைக்க முனைகிறது என்ற எண்ணத்தையே உண்டாக்கும்.

இதனுல் அந்தக் கழகம் நடத்தவிருக்கும் நகராட்சிமன்றத் தேர்தலில் தன்னுடைய தலைவர்கள் இல்லாமையால் மிக அதிகமாக வருந்தவேண்டியதிருக்கும் என்பது அரசினருடைய மதிப்பீடாக இருக்குமானுல் அது மிகப் பெருந்தவறு.

தி. மு. கழகத்தவரின் தற்போதைய மனஎழுச்சியினையும்—உணர்வினையும் தமிழக அரசு புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

தி. மு. கழகத்தினரின் மனஎழுச்சி ஒருவருக்கு உணர்த்துவது என்னவென்றில் அவர்களை தலைமைதாங்கி நடத்துவோர் இல்லாதிருந்தாலும்கூட தி. மு. கழகத்தின் தொண்டரணி தேர்தல்களில் ஈடுபடும்—அத்தேர்தல்களில் வெற்றியை ஈட்டும் என்பதுதான்!


தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
**வெண்சங்கு சீயக்காய்த் தூள்**
எங்கும் கிடைக்கும்.
மணத்தில் மிகுந்த
**செல்வம்ராணி ஊதுபத்திகளை**
உபயோகியுங்கள்.



●

தயாரிப்பாளர்கள் :
**வெண்சங்கு சீயக்காய்த்தூள் பாக்டரி**
3037—38 டபீர்குளம் ரோடு, தஞ்சை

# கருணாநிதி - என். வி. என். பொறுப்பில் விடுதலை!

24-12-63 செவ்வாய் அன்று தி. மு. கழகப் பொருளாளர் மு. கருணாநிதி, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் ஆகிய இருவரும் தங்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் வரையில் சென்னை நகரை விட்டு வெளியே செல்லக்கூடாது என்றும்," அவர்கள் ஒவ்வொருவரும் ரூ. 500 வீதம் பொறுப்புத் தொகையின் மீது விடுவிக்கப்பட வேண்டும் என்றும், உயர்நீதி மன்ற நீதிபதி திரு. அனந்தநாராயணன் அவர்கள் ஆணை பிறப்பித்தார்.

மற்றும் மதுரைத் தோழர்கள் காவேரிமணியம், பி. எஸ். மணியம், முத்தரசு, ஏ. வி. இராசு, முனியப்பன், இராமச்சந்திரன், ஆகிய ஒவ்வொருவரும் ரூ. 500 பொறுப்புத் தொகையின் மீது விடுவிக்கப்பட வேண்டும் என்று நீதிபதி ஆணையிட்டார். இவர்களுக்கு நிபந்தனை கிடையாது.

திரு. மு. கருணாநிதி, திரு. என். வி. நடராசன் மற்றும் மதுரைத் தோழர்கள் ஏழு பேர்கள் சார்பில் 23—12—63 அன்று தாக்கல் செய்யப்பட்ட அப்பீல் மனுவை உயர்நீதிமன்ற நீதிபதி ஏற்றுக்கொண்டு, அதன் மீது 24—12—63 அன்று தீர்ப்புக் கூறுகையில் மேற்கண்டவாறு ஆணை பிறப்பித்தார்.

மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும், அரசுத் துறை வழக்கறிஞர், மு. கருணாநிதியையும், என். வி. நடராசனையும், சென்னை நகரை விட்டு வெளியே செல்லக் கூடாது' என்ற நிபந்தனை மீது பொறுப்பில் விடலாம்' என்றும், 'வழக்குப் பற்றிய புலன் விசாரணை நடந்துகொண்டிருக்கிறபடியால் இவ்வித நிபந்தனை அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

நிபந்தனை விதிப்பதை நீதிபதி ஏற்றுக்கொண்டு, தமது தீர்ப்பிலும் அவ்வாறே குறிப்பிட்டுள்ளார்.

**திரு. மு. கருணாநிதி, திரு. என். வி. நடராசன், 'மற்றும் கழகத் தோழர்கள் தரப்பில் வாதாடிய வழக்கறிஞர் நாராயணசாமி (முதலியார்), திரு. மு. கருணாநிதியும், திரு. என். வி. நடராசனும் கழகத்தின் முக்கிய தலைவர்கள் என்றும், நகராட்சி மன்றத் தேர்தல் விவகாரங்களைக் கவனிக்க பிற மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டியது மிக அவசியமானதாக இருப்பதால், மதுரையைத் தவிர பிற இடங்களுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டுமென்றும் கோரினர்.**

**வாதத்தைக் கேட்ட நீதிபதி, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் வரையில், இந்த நிபந்தனையோடு பொறுப்பில் இருக்கட்டும் என்றும், அதற்குப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்றும் கூறிவிட்டார்.**

வழக்கு விசாரணையைக் கவனிப்பதற்குத் தோழர்கள் இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ., கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ., முரசொலி மாறன், என். வி. என். சோமு, வழக்கறிஞர்கள் வேலூர் நாராயணன், என். கணபதி, கா. வேழவேந்தன், ஆலடி அருணா, மைனர் மோசஸ் ஆகியோரும், அ. செல்வராசன் எம்.சி கோ. செங்குட்டுவன், டபிள்யூ. பி. பி. சுந்தரம், கே. எஸ். தினகரன் ஆகியோரும் மற்றும் ஏராளமான கழகத் தோழர்களும் வந்திருந்தனர்.

ஃ

மு. கருணாநிதி, என். வி. நடராசன், முத்தரசு, காவேரிமணியம், ஏ. வி. இராசு, முனியப்பன், திருப்பதி, பி. எஸ். மணியம், இராமச்சந்திரன் ஆகியோரைப் பொறுப்பில் விடுதலை செய்ய வேண்டுமென்று, அவர்கள் சார்பில் வழக்கறிஞர் நாராயணசாமி (முதலியார்) தாக்கல் செய்த மனு விவரம் :—

எப். ஐ. ஆர்-ல், அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் செயலில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிற முத்து உள்ளிட்ட ஐவரின் பெயர் தான் குற்றவாளிகள் பட்டியலில் தரப்பட்டிருக்கிறது. மனுதாரர்களின் பெயர் குற்றவாளிகள் பட்டியலில் இல்லை.

தமிழகச் சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் துணைத் தலைவரான மு. கருணாநிதி, 1964 ஜூலை 19-ந் தேதியன்று தஞ்சை நகரில் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்துவது என்பதும், அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன் 1964 டிசம்பர் 6-ந் தேதி சென்னையில் கொளுத்துவது என்பதும், மற்றும் காவேரி மணியம், திருப்பதி ஆகிய வழக்கறிஞர்கள் 1964 சனவரி 2-ந் தேதி மதுரை மத்திய அரசாங்க அலுவலகம் முன்பு மறியல் செய்வது என்பதும்தான் கட்சியின் திட்டம்.

இதர மனுதார்கள் அனைவரும் தி. மு. க.-வைச் சேர்ந்தவர்கள்; மரியாதைக்குரிய குடிமக்கள்.

இந்தியை ஆட்சிமொழியாக்குவது பற்றிய மத்திய சர்க்காரின் போக்குக் குறித்து, தி. மு. க. தெரிவிக்கும் எதிர்ப்புபற்றிய விவரங்கள் முன்பே பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டும், விளம்பரப் படுத்தப்பட்டும் இருக்கின்றன.

மு. கருணாநிதி, என். வி. நடராசன், காவேரிமணியம், திருப்பதி ஆகியோருக்கு இந்த போராட்டத்தில் என்ன பங்கு என்பது சென்னையில் 13-10-63 அன்று நடைபெற்ற மாநாட்டிலேயே பகிரங்கமாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.

தி.மு. கழகத்தின் செயல்களில் எதுவும் திரைமறைவோ, இரகசியமோ கிடையாது. 13-10-63 அன்று அதன் போராட்டத் திட்டங்களும், செயல் முறைகளும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றன.

எப்.ஐ.ஆர்.-படி, முத்து உள்ளிட்ட ஐவர் அணியினர் மட்டுமே குற்றவாளிகள் என்று கூறப் பட்டிருக்கின்றனர்.

பிறகு 16—12—63 அன்று தமிழக முதலமைச்சர், முத்து-ஐவர் அணியினர் கொளுத்திய போது, மு. கருணாநிதி மதுரையில் இருந்ததுபற்றி வன்மையாக கடிந்துரைத்திருக்கிறார். இது அன்றையத்தினம் வெளியான 'நவமணி', 'தினச்செய்தி', 'சுதேசமித்திரன்' வெளியூர் 'தமிழ்நாடு' ஆகிய ஏடுகளில் செய்தியாக வெளிவந்திருக்கிறது.

**இதையே தூண்டுகோலாக எடுத்துக்கொண்டு மதுரைப் போலீசார் 17-ம் தேதி நள்ளிரவும், அதற்குப் பிறகும் மனுதாரர்களைக் கைது செய்திருக்கின்றனர்.**

அண்மையில் நடக்கவிருக்கும் மாநகராட்சி, நகராட்சித் தேர்தல்களில் தி.மு.க.விற்குத் தொல்லை தந்து அதை வலுவிழக்கச் செய்யவேண்டும் என்கிற உள்நோக்கத்தோடுதான் ஆளுங் கட்சியினர் இச்செயலை இயக்கியிருக்கின்றனர்.

**கருணாநிதியும், என். வி. நடராசனும் தேர்தல் வெற்றி தி. மு. கழகத்தின் பக்கம் இருக்கும் வகையில் பணியாற்றுகின்ற தி. மு. கழகத்தின் சிறந்த அமைப்பாளர்கள்.**

மேலும், "குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட இடத்தில், அதாவது 1964 ஜூலை 19-அன்று அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவை எரிப்பேன்" என்று மு. கருணாநிதி, சட்டமன்றத்திலேயே குறிப்பிட்டார்.

மேலும், தானும், நடராசனும், மற்ற ஏராளமானவர்களைப் போலவே அந்தக் குறிப்பிட்ட தினத்தன்று பார்வையாளராகவே சென்றிருந்ததாகவும், மு. கருணாநிதி, தமிழக முதல் அமைச்சரின் குற்றச்சாட்டிற்குப் பதில் அளித்துள்ளார்.

**இதர கட்சிக்காரர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைத் தங்களது சொந்த நலத்திற்காகத் தவருகப் பயன்படுத்திக்கொள்வதைத் தடுப்பதற்கும், தி. மு. கழகத் தோழர்களிடையேயும், ஆதரவாளர்களிடையேயும் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டவுமே கருணாநிதியும், என். வி. நடராசனும் மதுரை சென்றிருந்தனர்.**

முத்து—ஐவர் அணியினரை, மனுதாரர்கள் தூண்டிவிடவுமில்லை.

மேலும், கருணாநிதியும், நடராசனும், மதுரை நகரில் வசிப்பவர்கள் அல்லர்; அதனால் இவர்களை விடுதலை செய்வதால், மதுரை நகரின் அமைதிக்கோ ஒழுங்கிற்கோ பாதகம் ஏற்படாது.

அதோடு, இதுபோன்ற வழக்குகளில் போலீசாரே முக்கிய சாட்சியங்களாக இருப்பதால், மனுதார்கள் விடுதலை செய்யப்பட்டால் சாட்சிகளை மாற்றிவிடுவார்கள் என்கிற பிரச்சினையே எழவில்லை.

இதனால், மதுரை சப்-மாஜிஸ்திரேட்டின் திருப்திக்கு உகந்த வகையில் இவர்கள், தங்களை ஜாமீனில் கோர்ட்டார் விடுதலை செய்யக் கோருகின்றனர்.

மதுரை மத்திய சிறையிலிருந்து 25—12—63 மாலை 6-மணிக்கு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி, அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன், காவேரிமணியம், பி. எஸ். மணியம், முத்தரசு, ஏ. வி. ராசு, முனியப்பன், திருப்பதி, இராமச்சந்திான் ஆகியோர் பொறுப்பில் விடுதலை செய்யப் பட்டனர்.

சிறைவாயிலில் டாக்டர் அருணாசலம், வழக்கறிஞர் ராமசுப்பிரமணியம், திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் எம்.எல்.எ, து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ. மற்றும் ஏராளமான கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் வரவேற்றனர்.

கருணாநிதி, என். வி. என். ஆகிய இருவரும் கார் மூலம் உடனே புறப்பட்டு, 26-12-63 அதிகாலை சென்னைவந்து சேர்ந்தனர்.

**'திராவிடன்'**

**சந்தா விவரம்**

—(O)—

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ... | ரூ. 8. |
| ஆறு மாதம் | ... | ரூ. 4. |
| தனிப்பிரதி | ... | 16 காசு. |

நிர்வாகி: 'திராவிடன்'
சென்னை 1.

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1